# மெட்ரோ ரயில் திட்டம் காஞ்சிபுரம் மாவட்டம் வரை நீட்டிப்பு

சென்னையில் முதல் கட்டமாக 45.01 கி.மீட்டர் நீளமுள்ள 2 வழித்தடங்கள் இந்த மாதம் இறுதிக்குள் முழுமையாக பயன்பாட்டிற்கு வர உள்ளது. திருவெற்றியூர் விம்கோ நகர் வரையிலான நீட்டிப்பு பாதை 2020ம் ஆண்டு ஜுன் மாதத்திற்குள் மக்கள் பயன் பாட்டிற்கு வரும். ஏற்கனவே, அறிவித்தபடி, மீனம் பாக்கம் விமானநிலையம் முதல் கிளாம்பாக்கம் மெட்ரோ பேருந்து பணிமனை வரை மெட்ரோ ரயில் வழித்தடம் நீட்டிபதற்கான சாத்தியகூறுகள் ஆய்வு செயப்படுகிறது.



2ம் கட்டமாக சென்னையில் 118.90 கி.மீ தூரமுள்ள 3 மெட்ரோ ரயில் வழித்தடங்களில், மாதவரம்-சோழிங்கநல்லூர், மாதவரம்- கோயம்பேடு பேருந்துநிலையம் வரை 52.01 கி.மீட்டர் வழித்தடங்களில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை மூலம் ரூ.20,196 கோடி நிதி உதவி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. தமிழக அரசும் 40,940 கோடி ரூபாய் செலவில் இத்திட்ட பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளித்துள்ளது. இந்த திட்டபணிகள் விரைவில் தொடங்கும். மற்ற வழித்தடங்கலுக்கான நிதி ஆதாரங்களை திரட்டும் பணி நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு மெட்ரோ ரயில் திட்டத்திற்காக பங்கு மூலதனம் மற்றும் கடனாக மொத்தம் ரூ.2,681 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.